**செ. கு. எண்: 148** **நாள் : 09.08.2014**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 9.8.2014

---

காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடியை மேற்கொள்ள ஏதுவாக, மேட்டூர் அணையில் அப்போதிருந்த நீர் இருப்பையும், நீர் வரத்தினையும் கருத்தில் கொண்டு, மேட்டூர் அணையிலிருந்து 15.8.2014 முதல் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படும் என்று 7.8.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்திருந்தேன்.

கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளிலிருந்து அதிக அளவில் நீர் வெளியேற்றப்பட்டதால் 7.8.2014 முதல் 9.8.2014 வரையில் சுமாராக 12.40 TMC அடி நீர் மேட்டூர் அணைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

மேட்டூர் அணையில், 9.8.2014 காலை நிலவரப்படி, நீர் அளவு 103.10 அடியாக உள்ளது. நீர் வரத்து வினாடிக்கு சுமார் 90,000 கன அடி என்ற அளவில் தற்போது வந்து கொண்டிருக்கிறது. மேலும், அணைக்கு இதே அளவு நீர் தொடர்ந்து வரக்கூடும் என்றும் தெரிகிறது.

தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு, காவேரி டெல்டா பாசனத்திற்காக, மேட்டூர் அணையிலிருந்து முதற்கட்டமாக வினாடிக்கு 9,000 கன அடி வீதம் 10.8.2014 முதலே தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**